**மத்திய மாகாண சபை - 2016**

---

மத்திய மாகாண சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது.

## 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மத்திய மாகாண சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதி செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 மாகாண சபையின் நிதியம்

2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மாகாண சபையின் நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

#### 2.2.2 ஏனைய கணக்குகள்

மீளாய்வாண்டிற்குரிய 2017 மார்ச் 31 ஆம் திகதியில் உள்ளவாறு மாகாண சபையின் ஏனைய கணக்குகளைச் சமர்ப்பித்தல் முன்னேற்றம் கீழே தரப்பட்டுள்ளது.

| | கணக்கின் பெயர் | 2016 ஆம் ஆண்டிற்குரிய<br>கணக்குகளின் மொத்த எண்ணிக்கை | 2016 ஆம் ஆண்டிற்குரிய<br>சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| (i) | ஒதுக்கீட்டுக் கணக்குகள் | 34 | 34 |
| (ii) | மாகாண சபை உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் | 66 | 66 |
| (iii) | மாகாண சபை உறுப்பினர்களுக்கான கடன் வசதிகள் முற்பணக் கணக்குகள் | 01 | 01 |
| (iv) | வணிக முற்பணக் கணக்குகள் | 08 | 08 |
| (v) | நியதிச்சட்ட மற்றும் நிதியக் கணக்குகள் | 04 | 04 |
| (vi) | வருமானக் கணக்குகள் | 02 | 02 |
| | மொத்தம் | 115 | 115 |

2.2.3 கணக்கீட்டுக் கொள்கைகள்

பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் PED/POL/CIR/2013-3 ஆம் இலக்க 2013 ஒக்தோபர் 02 ஆந் திகதிய பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் அரச துறையின் நிறுவனங்களில் கணக்கு வைக்கும் போது காசு அடிப்படையில் அல்லாமல் அட்டுறு அடிப்படை பயன்படுத்தப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், மத்திய மாகாண சபை அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் மூலதனச் சொத்துக்கள் கையேற்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 87,802,947 ஆன செலவினம் மற்றும் முன்னைய ஆண்டுகளின் மூலதனச் சொத்துக்களை கையேற்பதற்காக செலவிடப்பட்ட செலவினம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் 4 நிறுவனங்களினால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 5,615,966 ஆன நிலையான சொத்துக்கள் அந்நிறுவனங்களின் ஒதுக்கீட்டுக் கணக்கில் நடைமுறையல்லாத சொத்துக்கள் அசைவு தொடர்பான அறிக்கையில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.5 கட்டுநிதிக் கணக்கு

மாகாண திறைசேரி பதிவேடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியளவில் தீர்வுசெய்யப்படாத கட்டுநிதி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,217,507 ஆக இருந்ததுடன், அது ரூபா 1,037,055 கூட்டுத்தொகையான வரவு மீதியொன்றும் ரூபா 1,180,452 கூட்டுத்தொகையான செலவு மீதியொன்றையும் கொண்டிருந்தது.

2.2.6 பொது வைப்புக் கணக்குகள்

மாகாண திறைசேரி பொது வைப்புக் கணக்கில் ரூபா 386,013,252 ஆன மீதியொன்றாக இருந்ததுடன், 02 ஆண்டுகளை விஞ்சியிருந்த 12 நிறுவனங்களின் வைப்புக்கள் ரூபா 68,427,525 தொகை தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.7 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண சுற்றுலாத் திணைக்களத்தின் பொது வைப்புக் கணக்கு மற்றும் மாகாண திறைசேரி கணனி அச்சீட்டு குறிப்புகளுக்கு இடையே ஆரம்ப மற்றும் இறுதி மீதிகளில் ரூபா 327,779 ஆன வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) கைத்தொழில் அமைச்சின் மாகாண சபை உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றில் ஆண்டின் வரவு மற்றும் செலவு வைத்தல்களில் திணைக்கள புத்தகங்கள் மற்றும் திறைசேரி கணனி அச்சீட்டு குறிப்புகளுக்கு இடையே முறையே ரூபா 374,189 மற்றும் 374,200 ஆன வேறுபாடு காணப்பட்டது.

(இ) மாகாண புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் 3 செலவின விடயங்களுக்குரிய ஒதுக்கீட்டுக் கணக்கில் காண்பிக்கப்பட்டுள்ள மொத்தச் செலவினம் மற்றும் செலவின பேரேடுகளின் பிரகாரம் ஆண்டின் மொத்தச் செலவினத்திற்கிடையே ரூபா 157,995 ஆன வேறுபாடு காணப்பட்டது.

(ஈ) மாகாண புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் புத்தகங்கள் மற்றும் திறைசேரி குறிப்பு அறிக்கையின் பிரகாரம் மாகாண சபை உத்தியோகத்தர்களின் முற்பண பீ கணக்கில் ஆண்டில் வரவு வைத்தல் மற்றும்

செலவு வைத்தல்களில் முறையே ரூபா 1,060,000 மற்றும் ரூபா 7,339 ஆன வேறுபாடு காணப்பட்டது.

(உ) மாகாண கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் வியாபார மேம்படுத்தல் திணைக்களத்தின் முற்பணக் கணக்கின் ஆரம்ப மீதி, ஆண்டில் வரவு வைத்தல்கள் மற்றும் இறுதி வரவு மீதி திணைக்களப் பதிவேடுகள் மற்றும் திறைசேரி பதிவேடுகளுக்கு இடையே ரூபா 270,146 மற்றும் ரூபா 128,582 ஆன வேறுபாடு காணப்பட்டது.

(ஊ) மாகாண கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் வியாபார மேம்படுத்தல் திணைக்களத்தின் 17 உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளில் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்த தனியாள் மீதி வகைப்படுத்தல் பதிவேடு மற்றும் சீசீ 10 பதிவேட்டில் காண்பிக்கப்பட்டிருந்த மீதிகளுக்கு இடையே ரூபா 1,217,050 ஆன வேறுபாடு காணப்பட்டது.

### 2.2.8 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### (அ) பெறவேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மத்திய மாகாண சபைகளுக்குரிய நிறுவனங்களுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட முற்பணங்களுக்கான கடனின் கீழ் மீயவாண்டின் இறுதியில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 91,430,201 ஆன மீதியில் ரூபா 75,127,908 ஆன மீதிகள் வருடக் கணக்கிலிருந்து அறவிடப்படாமல் தொடர்ந்தும் மாற்றமுராது முன்கொண்டு வரப்பட்டுக் காணப்பட்டதுடன் அவற்றை தீர்வுசெய்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மாகாண வீடமப்பு திணைக்களத்தினால் நேரடிக் கடனின் கீழ் 1994 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டிருந்த கடன்தொகையில் அறவீடுகள் நிலுவையாக இருந்த ரூபா 1,959,120 ஆன தொகை மற்றும் சனச கடன் முறைமையின் கீழ் 1994 ஆம் ஆண்டு முதல் 1999 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வழங்கப்பட்டிருந்த கடன்தொகையில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அறவீடுகள் நிலுவையாக இருந்த ரூபா 1,206,143 ஆன கடன் தொகையை அறவிடுதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

(i) 35 உள்ளூராட்சி மன்றங்களுக்கு செலுத்த வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் ரூபா 527,534,903 தொகையும் நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 540,670,021 தொகையும் நிதி நிலைமைக்கூற்றில் பொறுப்புக்களாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) அனைத்து மாகாணங்களுக்கு இடையேயான கடன் மீதிகளை தீர்வுசெய்யும் கணக்கின் கீழ் செலுத்த வேண்டிய 15 மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,975,272 தொகையை தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) வருடக் கணக்கிலிருந்து மாற்றமுராது முன்கொண்டு வரப்படும் மாபனாவதுர வள நிலையத்தின் முற்பணக் கணக்கில் ரூபா 1,969,736 ஆன மீதியை தீர்வு செய்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.9 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---

மாகாண மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சினால் 2009, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் 9 மீன் நீடிப்புக்களை அமைப்பதற்காக இலங்கை மின்சார சபைக்கு கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 2,729,170 தொகைக்கு நிறைவேற்றப்பட இருந்த செயற்திட்டங்கள், ஏனைய மாற்று முன்மொழிவுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்ததாக மின்சார சபை அறிவித்திருந்த போதிலும் மாற்று முன்மொழிவுகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.10 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

---

கீழே காண்பிக்கப்படுகின்ற இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) சட்டரீதியான ஏற்பாடுகள் | |
| (i) அரசின் காணிகள் கட்டளை சட்டம் 269 ஆம் பிரிவு | அரசின் காணிகளிலிருந்து பயன்பெறும் காணிகள் முறைப்படி உரிய நிறுவனங்களுக்கு கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், அரச காணியிலிருந்து பயன்பெறுகின்ற நிறுவகங்கள் மற்றும் 406 பாடசாலைகளுக்குரிய காணிகளை கையளிப்பதற்கு பிரதேச செயலத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 2013 இன் 17 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 1942 இன் 18 ஆம் இலக்க அரச சேவைகள் சேமலாப நிதிய அதிகாரச் சட்டம் | மாகாண மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சரின் தனிப்பட்ட பதவியணியில் சேவையில் ஈடுபட்டுள்ள 9 உத்தியோகத்தர் களுக்காக 2016 சனவரி முதல் யூன் வரை போது செலுத்தப்பட வேண்டிய ரூபா 209,404 ஆன சேமலாப நிதி பங்களிப்பினை அந்நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 1972 இன் 05 ஆம் இலக்க கூட்டுறவு அபிவிருத்தி சங்க சட்டம் | பதிவுசெய்யப்பட்ட சங்கங்களின் வருடாந்த தேறிய இலாபத்தலிருந்து 10 சதவீதத்திற்கு மேற்படாத |

| | | |
|---|---|---|
| | 61 ஆவது பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட 43(ii) ஆம் விதி | மற்றும் ரூபா 5 இற்கு குறையாத தொகையொன்று கூட்டுறவு நிதியத்திற்கு வருடாந்தம் பங்களிப்பு செய்யப்பட வேண்டிய போதிலும் மத்திய மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் 424 சங்கங்களிடமிருந்து 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 169,990,340 ஆன பங்களிப்புத் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபை சட்டத்தின் 19(இ) பிரிவு | மாகாண சபை தொகுதியில் நடாத்திச் செல்லப்படும் சிற்றுண்டிச்சாலை வாடகைக்கு வழங்கியமைக்காக கிடைத்த ரூபா 512,502 ஆன வாடகை வருமானத்தை மாகாண சபை நிதியத்திற்கு செலவு வைக்கப்படாமல் ஊழியர் நலன்புரி சங்கத்தின் பெயரில் மக்கள் வங்கியில் பேணிச்செல்லப்படும் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. |
| (v) | 1993 இன் 4 ஆம் இலக்க கூட்டுறவு அபிவிருத்தி (திருத்திய) நியதிச் சட்டம் 59(7) ஆம் பிரிவு | 11 நீதிமன்றங்களிலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட ரூபா 8,672,372 ஆன தண்டப்பணம் கிடைத்து 1 ஆண்டு முதல் 3 ஆண்டு வரை காலம் கடந்திருந்த போதிலும் குறித்த சங்கங்களுக்கு தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (vi) | 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் மற்றும் உள்நாட்டு இறைவரி ஆணையாளரின் எஸ்ஈசீ/2015/05 ஆம் இலக்க 2015 யூலை 06 ஆந் திகதிய சுற்றறிக்கை | மத்திய மாகாண வருமானத் திணைக்களத்தின் 13 உத்தியோகத்தர்களிடமிருந்தும், பொறியியல் சேவைகள் திணைக்களத்தின் 22 உத்தியோகத்தர்களிடமிருந்தும் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 03 உத்தியோகத்தர்களிடமிருந்து 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய உழைக்கும் போது செலுத்தும் வரி முறையே ரூபா 190,085, ரூபா 171,781 மற்றும் 278,610 தொகைகளை கழித்து உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) இலங்கை சனநாயக குடியரசின் தாபன விதிக்கோவை

-----------------------------------------------------------

| | |
|---|---|
| xix ஆம் அத்தியாயத்தின் 5.3.1 ஆம் பிரிவு | பட்டியலிடப்பட்ட வீடுகளுக்காக உரித்துள்ள உத்தியோகத்தரெருவரின் சம்பளததி 10 சதவீதம் வீட்டு வாடகையாக அறவிடப்பட வேண்டிய போதிலும், அரச வீடகளில் குடியிருக்கும் மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து 18 மாத காலப்பகுதிக்குரியதாக அறவிடப்பட வேண்டிய ரூபா 81,198 ஆன வீட்டு வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. |

(இ) மத்திய மாகாண நிதி ஒழுங்கு விதிகள் கோவை (ம.நி.வி)

---

| | | |
|---|---|---|
| (i) | நி.வி. 54.5 மற்றும் 54.6 | சபை செயலகத்திற்குரிய மோட்டார் வண்டியொன்று 2013 செப்தம்பர் 18 ஆந் திகதி இடம்பெற்ற விபத்திற்கான 4 சந்தர்ப்பங்களில் ரூபா 212,761 மற்றும் தம்புள்ள வைத்தியசாலைக்குரிய பிணியாளர் வண்டி 2015 ஏப்ரல் 10 ஆந் திகதி விபத்திற்குட்டபட்டமையால் திருத்த வேலைகளுக்காக ரூபா 3,047,826 செலவிடப்பட்டிருந்த போதிலும் அவ்விபத்துக்கள் தொடர்பாக ஆரம்ப அறிக்கையொன்றையும் பூரண அறிக்கை யொன்றையும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நி.வி. 116.1 | 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் தம்புள்ள பிரதேச செயலகத்தில் நீண்டகாலமாக குத்தகை வாடகையக 5 நபர்களிடமிருந்தும் 5 நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 3,902,587 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நி.வி. 216.1.3 மற்றும் 238.1 | அடியிதழ்சேர் புத்தகங்கள் மற்றும் நிதப் பெறுமானமுள்ள ஏனைய மாதிரிப் படிவங்கள் காப்பகங்களிலும் பாதுகாப்பு பெட்டி போன்றவற்றில் வைக்கப்பட வேண்டிய போதிலும், போக்குவரத்து திணைக்களத்தின் ரூபா 1,231,650 அச்சுப் பெறுமதியுடைய வாகன அனுமதிப்பத்திர புத்தகங்கள் மற்றும் ரூபா 3,750,000 விற்பனைப் பெறுமதியான தகைமை சான்றிதழ் புத்தகங்கள் பாதுகாப்பான வகையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருக்க வில்லை. |
| (iv) | நி.வி.261.2.2 | செயல் நிமித்த உபகட்டுநிதி உரிய செயற்பாடு நிறைவுபெற்ற உடனேயே தீர்க்கப்பட வேண்டியதுடன், முற்பணம் பதவிநிலைத்தர உத்தியோகத்தர் ஒருவருக்கு மாத்திரம் செலுத்தப்பட வேண்டிய போதிலும், பிரதம அமைச்சு அந்நியதிகளுக்கு முரணாக நான்கு வெளிநபர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 454,869 ஆன முற்பணத்தை 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் தீர்த்து செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (v) | நி.வி. 277.2 | எழுதி கையொப்பமிடப்பட்ட எந்தவொரு காசோலையையும் குறித்த பதவிநிலைத்தர உத்தியோகத்தரின் எழுத்துமூல அனுமதியின்றி ஒரு வாரத்திற்கு மேற்பட்ட காலம் அருகில் வைத்துக்கொள்ளப்படக் கூடாத போதிலும், 5 நிறுவனங்களினால் எழுதப்பட்ட ரூபா 73,564,644 பெறுமதியான 261 காசோலைகள் பெறுவோனுக்கு |

| | | |
|---|---|---|
| | | வழங்கப்படாமல் காசோலை விநியோகிக்கும் உத்தியோகத்தர் பொறுப்பில் வைக்கப்பட்டிருந்தது. |
| (vi) | நி.வி.476 | மாகாண சபையின் ஒரு அமைச்சு, திணைக்களங்கள் மற்றும் 6 நிறுவனங்க், பிராந்திய அலுவலகங்கள் மற்றும் வைத்தியசாலைகள் உட்பட 133 பிரிவுகளில் மீளாய்வாண்டிற்காக பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (vii) | நி.வி.561 | மத்திய மாகாண சபையின் 07 நிறுவனங்களினால் நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

(ஈ) சனாதிபதி செயலகத்தின் சுற்றறிக்கைகள்

| | | |
|---|---|---|
| (i) | 2006 சனவரி 04 ஆம் திகதிய CSA/PI/40 ஆம் இலக்க சுற்றறிக்கை | பிரதம அமைச்சருக்கும் அவரது தனிப்பட்ட பதவியணியினருக்கும் வைத்திருக்கக்கூடிய வாகனங்களின் எண்ணிக்கை 7 ஆக இருந்த போதிலும். மத்திய மாகாண பிரதம அமைச்சருக்கும் அவரது தனிப்பட்ட பதவியணியினருக்கும் 14 வாகனங்கள் இணைக்கப்பட்டிருந்தன. |
| (ii) | 2008 யூன் 26 ஆம் திகதிய 13/2008 ஆம் இலக்க சுற்றறிக்கை | வழமையான அலுவலகத் தேவைகளுக்கு புறம்பான விசேட கடமையொன்றுக்காக உத்தியோகபூர்வ வாகனத்தைப் பயன்படுத்துவதற்கு தேவையான சந்தர்ப்பங்களில் அதற்காக செலவிடப்படும் மேலதிக எரிபொருள் ஏற்பாடு அமைச்சு செயலாளரின் / மாகாண சபையின் பிரதம செயலாளரின் தனிப்பட்ட அங்கீகாரத்தின் பேரில் மாத்திரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், மூன்று உத்தியோகத்தர்களால் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 457,505 பெறுமதியான 4355 லீற்றர் எரிபொருளும் அங்கீகாரம் இல்லாமல் பெறப்பட்டிருந்தன. |
| (iii) | 2015 யூன் 05 ஆம் திகதிய CSA/1/1/83 ஆம் இலக்கம் மற்றும் 2016 திசெம்பர் 05 ஆந் திகதிய CSA/1/3 ஆம் இலக்க சுற்றறிக்கை | வெளிநாட்டுப் பயணங்கள் இடைநிறுத்தப் பட்டிருக்கையில் இயலளவு அபிவிருத்தி கல்வி நடவடிக்கைகளுக்காக மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் 64 உத்தியோகத்தர்கள் வெளிநாடுகளில் சுற்றுலாக்களை மேற்கொண்டமைக்காக ரூபா 24,917,057 செலவிடப்பட்டிருந்தது. |

(உ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை

| | | |
|---|---|---|
| (i) | 2013 யூலை 05 ஆந் திகதிய HAF/3-ADMIN-02-00 ஆம் இலக்க சுற்றறிக்கை 4 மற்றும் 5 ஆம் பந்திகள் | அனுமதியற்ற கையேற்றல் / நிர்மாணம் தொடர்பான அறிக்கையொன்று பிரிவிற்குப் பொறுப்பான கிராம சேவையாளர் மூலம் உடுநுவர பிரதேச செயலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் செயற்படாமையால் 2016 ஆம் ஆண்டில் 09 அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் இருந்தமை அவதானிக்கப்பட்டன. |
| (ii) | 2014 நவம்பர் 26 ஆந் திகதிய 08/2014 ஆம் இலக்க சுற்றறிக்கைகடிதம் | அரச துறைக்குரிய சகல வாகனங்களையும் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்ததிலோ அல்லது தேசிய காப்புறுதி நிதியத்திலோ காப்புறுதி செய்யப்பட வேண்டிய போதிலும், சுகாதார அமைச்சினதும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குச் சொந்தமான 48 வாகனங்கள் காப்புறுதி செய்யப்பட்டிருக்கவில்லை. |

(ஊ) ஏனைய சுற்றறிக்கைகள்

| | | |
|---|---|---|
| (i) | 2000 யூன் 30 ஆந் திகதிய 2000/02 ஆம் இலக்க அரச சேவைகள் ஆணைக்குழுவின் கல்விச் சேவைகள் குழுவின் சுற்றறிக்கை | இலங்கை கல்வி நிர்வாக சேவைக்குரிய பதவியொன்றுக்கு நியமனம் அல்லது அப்பதவிகளுக்கு அல்லது அதற்கு சமமான பதவிக்கோ பதில் கடமைக்காக அல்லது கடமை மேவுகைக்காக செய்யப்படும் நியமனமொன்றை அரச சேவைகள் ஆணைக்குழுவின் கல்விச் சேவைகள் குழு மாத்திரமே வழங்க முடியுமாக இருந்த போதிலும், நுவரெலியா மற்றும் வத்தேகம கல்வி வலயங்களில் அவ்வாறான பதவிகளில் பதில் கடமை புரிவதற்காக இலங்கை ஆசிரியர் மற்றும் அதிபர் சேவைக்குரிய 16 பேர் மத்திய மாகாணத்தின் பிரதம மற்றும் கல்வி அமைச்சின் செயலாளரால் நியமனம் செய்யப்பட்டிருந்தனர். |
| (ii) | 2008 செப்தம்பர் 19 ஆந் திகதிய 2008/37 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.1(அ),(ஆ) | 2 தரத்திலிருந்து 5 ஆந் தரம் வரை வகுப்பொன்றில் 40 மாணவர்களும் 6 ஆந் தரத்திலிருந்து 11 ஆந் தரம் வரை வகுப்பொன்றில் மாணவர்களின் எண்ணிக்கை 45 இற்கு மட்டுப்படுத்தப்பட வேண்டிய போதிலும், அந்த எல்லையை விஞ்சி சரசவிஉயன மஹா வித்தியாலயத்தில் முறையே 278 மாணவர்கள் மற்றும் 89 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தனர். |
| (iii) | 2012 மே 24 ஆந் திகதிய 4/3/200i/48 ஆம் இலக்க காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கை | காணி கையேற்றல் நடவடிக்கைகள் 72 வார காலப்பகுதியில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 6 பிரதேச செயலகங்களுக்குரிய மேலும் வேலை பூர்த்தி செய்யப்படாத 323 கோவைகள் காணப்பட்டன. |

| | |
|---|---|
| (iv) 2015 சனவரி 29 ஆந் திகதிய 05/2015 ஆம் இலக்க கல்வி அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கை | சரசவிஉயன மஹா வித்தியாலயத்தில் முதலாம் வகுப்புக்கு மாணவர்களை அனுமதிக்கும் போது மாணவரொரு வரிடமிருந்து ரூபா 15,000 வீதம் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 3,540,000 மற்றும் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 1,337,000 அறவிடப்பட்டிருந்தது. |

## 3. வருமான முகாமைத்துவம்

(அ) மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் மாகாண சபையின் ஒவ்வொரு வருமானத் தலைப்பின் கீழ் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமானக் குறியீட்டு இலக்கம் | வருமான விபரம் | 2016 திருத்திய மதிப்பிடப்பட்ட வருமானம் | 2016 உள்ளவாறான வருமானம் | 2015 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2015 உள்ளவாறான வருமானம் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| ம -10 | உற்பத்தி மற்றும் செலவினத்தின் மீதான வரி | 6,030.66 | 6,173.57 | 5,217.95 | 5,339.45 |
| ம - 20 | விற்பனை மற்றம் கட்டணங்கள் | 735.34 | 806.87 | 427.05 | 775.60 |
| | மொத்தம் | 6,766.00 | 6,980.44 | 5,645.00 | 6,115.05 |

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் மற்றும் முன்னைய இரண்டு ஆண்டுகளிலும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | |
|---|---|---|---|
| | 2016 | 2015 | 2014 |
| | ரூபா | ரூபா | ரூபா |
| ஆதனங்களை கையளித்தல் மீதான முத்திரைக் கட்டணங்கள் | 22,875,550 | 24,129,826 | 28,082,495 |
| அரசின் காணிகள் சட்டத்தின் கீழ் கட்டணங்கள் | 9,824,999 | 2,771,801 | 1,555,845 |
| கணிய உரிமை தொடர்பான வரி | 400,143 | 202,842 | - |

| | | | |
|---|---|---|---|
| வியாபார புரள்வு வரி | 33,920,901 | 45,381,205 | 64,656,881 |
| மதுபான தண்டப்பணமும் வட்டியும் | 1,725,000 | 1,725,000 | 2,325,000 |
| அடகு வைப்போரிடமிருந்து அறவிடப்பட்ட கட்டணங்கள | 21,000 | 21,000 | 21,000 |
| மொத்தம் | 68,767,593 | 74,231,674 | 96,641,221 |
| | ========= | ========= | ========= |

பின்வரும் அவதானிப்புக்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மாகாண நிதி விதி 41.1.4 இன் பிரகாரம் வருமான மதிப்பிடு நடைமுறை ரீதியாகவும் சரியாகவும் தயாரிக்கப்பட வேண்டுமென ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும் அக்குரனை பிரதேச செயலகத்திற்கு 8 வருமானத் தலைப்புக்களில் 2015 ஆம் ஆண்டில் ரூபா 20,607,819 ஆன வருமானம் கிடைத்திருந்த போதிலும், அதற்காக வருமான மதிப்பீடு தயாரிக்கப்படாதிருந்ததுடன் நீண்டகால குத்தகையாளர்களிடமிருந்து 2015 ஆம் ஆண்டிற்காக அறவிடப்பட வேண்டிய வாடகை ரூபா 1,930,858 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) தேசிய நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்பு சபையிடமிருந்து அக்குரனை பிரதேச செயலகத்திற்கு கிடைக்க வேண்டிய ரூபா 1,930,250 ஆக குத்தகை வருமானம் மற்றும் தம்புள்ள பிரதேச செயலகத்திற்கு சுவிஸ் பயிற்சி நிலையத்திடமிருந்து ரங்கிரி தம்புள பல்நோக்கு கூட:டுறவு சங்கத்திடமிருந்தும் தம்புள்ள எட்டவராஹேனவில் அமைந்துள்ள அயர்லாந்து கலாச்சார நிலையத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய குத்தகை தொகையை அறவிடுவதற்கோ அல்லது காணியை மீளகையேற்கவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) சீ.ஐ.சீ,பேர்டிலைசர்ஸ் தனியார் கம்பனிக்கு 2001 ஆகஸ்ட் 31 ஆந் திகதி முதல் 50 ஆண்டு காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்கப்பட்ட காணியில் குத்தகை கணிப்பீடு பிழையாக மேற்கொள்ளப்பட்டமையால் ரூபா 3,003,921 ஆன குத்தகை வாடகை நிலுவையாக காணப்பட்டன.

(iv) பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 19 நபர்களிடமிருந்து ரூபா 3,913,000 தொகை 2017 சனவரி வரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், மாத்தளை பிரதேச செயலகம் நீண்டகால குத்தகை உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கு காணப்படும் நடைமுறையின் அசாதாரண தாமதம் காரணமாக அரசிற்கு குத்தகை வாடகை அறவிடுவதற்கு முடியாதிருந்தமையால் பாரியளவு நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(v) கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களததிற்குச் சொந்தமான மொத்த தீர்ப்பாளர் தொகை ரூபா 54,599,722 இல் ரூபா 8,672,379 ஆன நிச்சயமற்ற நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் ரூபா 2,032,456 தொகையான கோரப்படாத மேன்முறையீட்டு தொகை யாக இருந்ததுடன் சேமிக்கப்பட்ட ரூபா 43,894,887 தொகை இனங்காணப்படாதிருந்தது. இதன் பிரகாரம் சங்கங்களுக்கு தீர்வுசெய்யப்பட வேண்டிய நீதிமன்றத்தண்டப்பணம் கோரப்படாத மேன்முறையீடு போன்றவற்றை தீர்வுசெய்தல் முறையற்ற நிலைமையில் காணப்பட்டன.

4. நிதி மீளாய்வு

4.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மாகாண சபை நிதியத்தில் ரூபா 27,415,737,187 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 25,670,888,447 ஆக இருந்தது.

4.2 பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு

வருமானம் மற்றும் செலவினம்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் வருமானம் மற்றும் செலவினம் தொடர்பான பொழிப்பொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

| | 2016 | | | 2015 | | |
|---|---|---|---|---|---|---|
| | பாதிடப் பட்டவை | உள்ளபடி யானவை | முரண் | பாதிடப் பட்டவை | உள்ளபடி யானவை | முரண் |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| <u>வருமானம்</u> | | | | | | |
| வரி வருமானம் | 6,030.65 | 6,173.57 | (142.92) | 5,217.95 | 5,339.45 | (121.5) |
| வரியல்லா வருமானம் | 735.34 | 806.87 | (71.53) | 427.04 | 775.59 | (348.55) |
| அரசாங்க மானியம் | 23,374.86 | 23,374.86 | - | 24,678.11 | 23,542.11 | 1,136.00 |
| மானியம் அல்லாத ஏனைய பெறுவனவுகள் | 12,988.52 | 3,221.87 | 9,766.65 | 4,414.48 | 3,927.45 | 487.03 |
| மொத்தம் | 43,129.37 | 33,577.17 | 9,552.2 | 34,737.58 | 33,584.6 | 1,152.98 |
| <u>மீண்டெழும் செலவினம்</u> | | | | | | |
| தனிப்பட்ட வேதனங்கள் | 23,783.93 | 23,651.28 | 132.65 | 23,254.55 | 23,076.32 | 178.23 |
| ஏனைய செலவினங்கள் | 6,245.99 | 5,648.21 | 597.78 | 5,393.84 | 4,921.69 | 472.15 |
| உப மொத்தம் | 30,029.92 | 29,299.49 | 730.43 | 28,648.39 | 27,998.01 | 650.38 |
| மூலதனம் | 12,989.01 | 5,096.68 | 7,892.33 | 4,799.64 | 3,787.92 | 1,011.72 |
| மொத்தம் | 43,018.93 | 34,396.17 | 8,622.76 | 33,448.03 | 31,785.93 | 1,662.1 |

05. நியதிச்சட்டக் கணக்குகள் / வர்த்த முற்பணக் கணக்குகள் மற்றும் ஏனைய முற்பணக் கணக்கு

மாகாண சபையின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட 2 நியதிச்சட்டக் கணக்குகளுக்கும் 2 வர்த்தக முற்பணக் கணக்குகளுக்கும் அபிப்பராயமொன்று தெரிவிக்கப்படாதிருந்ததுடன் 3 வர்த்தக முற்பணக் கணக்குகளுக்காக முனைப்பழியுள்ள அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

5.1 நியதிச்சட்டக் கணக்குகள்

5.1.1 மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்து சேவைகள் அதிகாரசபை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னைய 3 வருடங்களுக்கு முன்னர் பட்டியலிடப்பட்ட ரூபா 1,208,900 தொகையான பாடசாலை சேவைகள் அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் மற்றும் மிகைக் கட்டண தொகை மீளாய்வாண்டில் பதிவழிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்காக நிலுவை வருமானமாக ரூபா 2,326,400 மீதியொன்று காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 9,827,330 கூட்டுத்தொகையான 6 கணக்கு விடயங்களுக்குரிய நிலையான சொத்துக்கள் பதிவேடு, கணிப்பிட்டு சபை அறிக்கை, பயன்பாட்டு பதிவேடுகள் மற்றும் மீதிகள் உருவாகிய முறை என்பவற்றைக் காண்பிக்கும் பட்டோலைகள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) அதிகாரசபையினால் 2017 பெப்ரவரி மாதத்தின் தரவு முறைமைக்காக ரூபா 837,825 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் முறைமை செயற்படு நிலைமையில் இருக்கவில்லை. செயற்திட்ட அறிக்கையின் பிரகாரம் பொதுப் பேரேட்டு முறைமையொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சஹசர செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக குறை நிரப்பு மதிப்பீடொன்று மூலம் அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 25,000,000 பணத்தில் ரூபா 16,434,074 தொகை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்பினை செலுத்தி ரூபா 8,000,000 தொகை நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் ரூபா 24,434,074 தொகை நோக்கத்திற்கு முரணாக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(உ) 1983 இன் 12 ஆம் இலக்க ஊழியர் பணிக்கொடை அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பணிக்கொடை ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டு நிதியமொன்று உருவாக்கப்படாமல் இருந்ததுடன் மீளாய்வாண்டு வரை ஒதுக்கப்பட வேண்டிய பணிக்கொடை ஏற்பாட்டுத் தொகை ரூபா 49,736,853 ஆக இருந்தது.

5.1.2 மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 55 அரச நிறுவனங்களிடமிருந்து அவிடப்பட வேண்டிய 1 ஆண்டு முதல் 6 ஆண்டுகள் வரையான காலவீச்சிற்குரிய ரூபா 3,403,023 ஆன வாகன திருத்த வேலைகள் கட்டணங்கள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வீதி அபிவிருத்தியின் போது தமது ஆதனங்களுக்கு சேதம் ஏற்பட்டதாக 4 நபர்களினால் அதிகாரசபைக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 6,221,688 ஆன இழப்பீட்டு தொகையொன்று கோரப்பட்டிருந்தது. அந்த 4 வழக்குகள் உட்பட 9 வழக்குகள் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருகின்றன.

(இ) மீளாய்வாண்டில் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குரிய வீதிகளைப் பராமரிப்பதற்காக ரூபா 190,000,000 நிதிஏற்பாடு கிடைக்கப் பெற்றிருந்த போதிலும் அதில் 39 சதவீதமான ரூபா 74,943,031 மாத்திரம் வீதி பராமரிப்பிற்காக செலவிடப்பட்டு 61 சதவீதமான ரூபா 116,056,969 தொகை ஊழியர் சம்பளத்தை செலுத்துவதற்கு பயன்படுத்தப்பட்டிருந்தது.

5.2 வர்த்தக முற்பணக் கணக்குகள்

5.2.1 மத்திய மாகாண புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் 581202 ஆம் விடய புடவைக் கைத்தொழில் வேலைத்தளங்களை அமைத்தல் மற்றும் நிர்வகித்தல் தொடர்பான வர்த்தக முற்பணக் கணக்கு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டிலிருந்து நிலவி வரும் கடன் விற்பனைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 11,688,914 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 மற்றும் அதற்கு முன்னராக இருந்து வரும் ரூபா 1,589,283 ஆன இருப்பு விற்பனை மீதி, ரூபா 5,225,818 ஆன பெறவேண்டிய பற்றாக்குறை மீதி மற்றும் வருடக் கணக்காக பிரதம செயலாளர் பெயரில் இருந்து வரும் ரூபா 16,712,065 ஆன கிடைக்க வேண்டிய மீதிகள் மீளாய்வாண்டின் போதும் தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 23,456,086 ஆன நூல் இருப்பொன்று இருந்ததுடன் ஆண்டின் போது ரூபா 29,757,276 ஆன நூல் இருப்பு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எனினும் ஆண்டில் ரூபா 22,135,004 நூல் இருப்பு மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 2,451,042 ஆன டை மற்றும் இரசாயன இருப்பொன்று காணப்பட்டதுடன் ஆண்டின் போது ரூபா 4,018,679 ஆன டை மற்றும் இரசாயன இருப்பு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எனினும் ஆண்டில் ரூபா 2,360,282 ஆன டை மற்றும் இரசாயன இருப்பு மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(உ) திணைக்களத்திற்குச் சொந்தமான 145 புடவைக் கைத்தொழில் நிலையங்களில் 36 நிலையங்களுக்கு நீர் மற்றும் மின்சாரமும் 20 நிலையங்களுக்கு நீரும் 13 நிலையங்களுக்கு மின்சாரமும் என 69 நிலையங்களுக்கு அடிப்படை வசதிகள் காணப்படாதிருந்ததுடன் போதியளவு ஊழியர் அளவொன்றும் இல்லாதிருந்தமை மற்றும் ஏனைய காரணங்களின் அடிப்படையில் 12 நிலையங்கள் மூடப்பட்டிருந்தன.

5.2.2 552202 ஆம் இலக்கம் - குருதெனிய கல்வி அபிவிருத்தி கேந்திரத்தின் வர்த்தக முற்பணக் கணக்கு

பயிற்சி நிலையத்திற்குச் சொந்தமான செயற்பாடற்ற மின்பிறப்பாக்கியொன்று திருத்தியமைக்கப்படாமல் வருடக் கணக்காக விளைவற்றுக் காணப்பட்டதுடன், ரூபா 1,299,300 ஆன கிரயத்தில் பூர்த்தி செய்யப்பட்ட கோள் மண்டலத்தை கண்டு களிக்ககூடிய நிலையமொன்றும் ரூபா 341,000 பெறுமதியான 10 – பொருள் உருப்படிகள் என்பன 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டன.

5.2.3 550202 ஆம் இலக்கம் - மாபனாவத்துர வள நிலைய வர்த்தக முற்பணக் கணக்கு

பாடசாலை தளபாட உற்பத்தி வருடக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமையால் திருத்த வேலைகளுக்கு மாத்திரம் மூலப்பொருள் பயன்படுத்தப்பட்டு வந்தன. எனினும் தேவையான மூலப்பொருள் அளவு சரியாக மதிப்பீடு செய்யப்படாமல் தேவைப்பாட்டை மிகைத்து 5 உருப்படிகள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 2,329,273 செலவிடப்பட்டதன் காரணமாபக ஆண்டின் இறுதியில் ரூபா 2,493,621 பெறுமதியான முடிவுப்பொருள் இருப்பு விளைவற்றுக் காணப்பட்டன.

5.2.4 550203 ஆம் இலக்கம் - ஹட்டன் வள நிலைய முற்பணக் கணக்கு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) எவரேனும் உத்தியோகத்தரொருவரின் தாமதம், கவனயீனம், தவறு அல்லது மோசடி காரணமாக மாகாண சபைக்கு ஏற்படும் நட்டமொன்று குறித்த உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்தே அறவிடப்பட வேண்டிய போதிலும் நிலையப் பொறுப்பு உத்தியோகத்தரால் தமது விருப்பின் பேரில் பட்டியலிடப்படாத ரூபா 2,631,800 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவிலலை.

(ஆ) 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 11,209,653 மிகையான நிதி விளைவுகள் படிப்படியாக குறைவடைந்து மீளாய்வாண்டின் போது ரூா 25,064 ஆன பற்றாக்குறையாக இருந்த போதிலும் முகாமைத்துவத்தினால் இதற்காக எவ்வித நடவடிக்கையொன்றையும் எடுத்திருக்கவில்லை.

5.3 ஏனைய முற்பணக் கணக்குகள்

5.3.1 மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு நடவடிக்கை தொடர்பாக விதிக்கப்பட்டிருந்த ஆகக் குறைந்த எல்லைகளுக்கு 7 நிறுவனங்கள் அடையாதிருந்ததுடன் 2 நிறுவனங்களின் செலவினங்களின் உயர் எல்லை மிகைத்திருந்தன.

(ஆ) பிரதம செயலகத்திற்குரிய 13 நிறுவனங்களின் மாகாண சபை உத்தியோகத்தர்களுக்கு முற்பணம் வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 1,925,050 ஆன நிதிஏற்பாடு 100 சதவீதம் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மாகாண சபை உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2016

திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த 6 இணைக்கக் கூற்றுக்களில் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,268,152 ஆக இருந்ததுடன் அந்நிலுவை மீதிகளை அறவிடுவதன் பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலைமையில் காணப்பட்டன.

(ஈ) மாகாண பொறியியல் திணைக்களம், கடன்கொடுப்பனவின் போது பின்பற்றப்பட வேண்டிய ஏற்பாடுகளை பின்பற்றப்படாமல் 27 பேருக்கு ரூபா 2,045,424 ஆன இடர் கடன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன.

(உ) மாகாண புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் ஆண்டின் இறுதி வரையில் 6 உத்தியோகத்தர்களிடமிருந்து கூடுதலாக அறவிடப்பட்டிருந்த ரூபா 352,855 தொகை தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 5.3.2 மாகாண சபை உறுப்பினர்களுக்கான முற்பணக் கணக்கு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண சபை உறுப்பினர்களுக்கான கடன் முன்மொழிவு முறையொன்று ஸ்தாபிப்பது தொடர்பாக 2001 மார்ச் 28 ஆந் திகதிய நிதி/01/2001 ஆம் இலக்க மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற சுற்றறிக்கையில் 6 ஆம் பந்தியின் பிரகாரம் பதவி இழக்கப்பட்ட 6 உறுப்பிகளுக்குரிய ரூபா 1,653,678 தொகையான முற்பணத்தை அறவிடாமல் தவணைகளில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உறுப்புரிமையை விட்டுச்சென்ற மாகாண சபை உறுப்பினர்களிடமிருந்து அறவிடாமல் காணப்படும் ரூபா 157,114 ஆன கடன் மீதி 2006 செப்தம்பர் 04 ஆந் திகதி முதல் 2016 திசெப்ர் 31 வரை 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. செயற்பாட்டு மீளாய்வு

### 6.1 செயலாற்றல்

(அ) மத்திய மாகாணத்தின் சுகாதார மற்றும் போசணை தொடர்பான தகவல்கள் சிலவற்றி தேசிய சராசரி தரவுகளுடன் ஒப்பிடப்பட்டு கீழே காண்பிக்கப்படுகின்றன.

| காரணம் | ஆண்டு | மாவட்டம் | | | மத்திய மாகாணம் | தேசிய |
|---|---|---|---|---|---|---|
| | | கண்டி | மாத்தளை | நுவரெலியா | | |
| தாய் மரண விகிதம் (**MMR**) (100,000 பிறப்பிற்கு) | 2014 | 30.5 | 10.6 | 62.7 | 37.6 | 32.0 |
| 5 வயதுக்கு குறைந்த சிறுவர் மரண விகிதம் | 2014 | 10.0 | 13.0 | 11.8 | 11.1 | 9.9 |
| (**IMR**) (1,000 பிறப்பிற்கு) | 2014 | 8.6 | 11.8 | 10.1 | 9.7 | 8.6 |
| மரண விகிதம் (**NNMR**) (1,000 பிறப்பிற்கு) | 2014 | 8.7 | 8.9 | 6.1 | 7.9 | 6.2 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| சனத்தொகையில் 100,000 இற்கு மருத்துவ உத்தியோகத்தர்கள் | 2015 | 100 | 55 | 33 | 73 | 77 (2014) |
| சனத்தொகையில் 100,000 இற்கு தாதிகள் | 2015 | 239 | 115 | 62 | 166 | 189 (2014) |
| சனத்தொகையில் 1,000 இற்கு கட்டில்களின் எண்ணிக்கை | 2015 | 4.5 | 3.2 | 2.4 | 3.7 | 3.9 (2014) |

(ஆ) மத்திய மாகாணத்தின் 8 வைத்தியசாலைகளில் 2015 ஆம் ஆண்டின் போது இடம்பெற்ற 24,866 பிறப்புக்களில் 14,733 அதாவது 59 சதவீதம் குறை நிறையுடைய பிறப்புக்களாக இருந்தமை அவதானிக்கப்பட்டன.

(இ) மீளாய்வாண்டின் போது மாத்தளை மாவட்டத்திற்குரிய வைத்தியசாலைகளின் பயன்பாட்டிற்காக கொழும்பு பிரதான மருத்துவ வழங்கல் பிரிவிடமிருந்து கோரப்பட்ட மருந்துகளிலிருந்து 50 வகைகளுக்குரிய மருந்துகளில் எதுவும் கிடைக்கப் பெறாதிருந்ததுடன் 26 வகைக்குரிய மருந்துகளில் 35 சதவீதத்திற்கும் குறைவான அளவு கிடைத்திருந்தன. இந்த நோயாளி உபகார சேவைகளை சிறப்பாக செய்வதற்கு தடையொன்றாக இருந்தது.

(ஈ) மத்திய மாகாண நூலக சேவை சபையின் பிரதான செயற்பணி, அறிவு மற்றும் தகவல்களை சுதந்திரமாகவும் தொடர்ந்தும் பயன்படுத்துவதற்கு கூடிய சந்தர்ப்பத்தை வழங்குவதினூடாக செயற்திறனான மற்றும் வினைத்திறனான செயலாற்றலொன்றை மனித வளங்களுக்கு வழங்குவதாக இருந்த போதிலும், ரூபா 7,000,000 ஆன பெறுமதியான 14,928 புத்தகங்களுடன் கூடிய மாகாண நூலகத்தின் புத்தகங்களைப் பயன்படுத்தும் வாசகர்களின் அளவு 145 ஆக இருந்ததுடன் வெளிவாரியான வாசகர்கள் எண்ணிக்கை 20 ஆக இருந்தது.

(உ) மீளாய்வாண்டில் மத்திய மாகாணத்தின் பரீட்சை பெறுபேறுகளை ஆய்வு செய்த போது 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு இடையே 11,996 அதாவது 27 சதவீதம் 70 இற்கு குறைவாக புள்ளிகளைப் பெற்றுக் கொண்டிருந்ததுடன் க.பொ.த(சா.த) பரீட்சைக்கு தோற்றிய 37,665 மாணவர்களில் 11,733 மாணவர்கள் சித்தியடைந்திருக்கவில்லை. அதில் 1,225 மாணவர்கள் அதாவது 3.25 சதவீதம் அனைத்து பாடங்களில் சித்தியடையாமல் இருந்ததுடன், கணித பாடத்திற்கு தோற்றிய மாணவர்களில் 44.8 சதவீதமும் விஞ்ஞான பாடத்திற்கு தோற்றிய மாணவர்களில் 41 சதவீதமும் ஆங்கில பாடத்திற்காக தோற்றிய மாணவர்களில் 60 சதவீதமும் சித்தியடைந்திருக்கவில்லை. அவ்வாறே க.பொ.த (உ.த) பரீட்சைக்காக தோற்றிய 26,654 மாணவர்களில் பல்கலைக்கழக அனுமதிக்காக தகைமை பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 16,524 அதாவது 62 சதவீதமாக இருந்ததுடன் 2015 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது பௌதீக விஞ்ஞானம், கலை, ஏனைய உடற்கூரியல் மற்றும் பொறியியல் தொழில்நுட்ப என்பவற்றில் சித்தியடைந்த சதவீதம் அதிகரிப்பொன்றை காண்பித்த போதிலும், உயிரியல் மற்றும் வர்த்தக விடயபரப்பில் சித்தியடைதல் சதவீதம் குறைவடைந்திருந்தது. அது தொடர்பாக 1.16 சதவீதம் மற்றும் 0.74 சதவீதமாக இருந்தன.

(ஊ) மாகாண கைத்தொழில் அமைச்சின் மகளிர் அபிவிருத்தி பிரிவினால் 2014, 2015 ஆம் ஆண்டுகளில் மற்றும் 2016 செப்தெம்பர் 30 வரை ரூபா 5,088,992 செலவினமொன்று மேற்கொண்டு மத்திய மாகாண மகளிர்களுக்காக வருமானம் உழைக்கும் செயற்திட்டங்களை அறிமுகப்படுத்தல் சமூக மற்றும் பொருளாதார நிலைமையை உயர்வடையச் செய்தலை நோக்கமாகக் கொண்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்த போதிலும் அதன் மூலம் அவர்கள் உரிய நலன்களை பெற்றுக்கொண்டார்களா என்பது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

6.2 முகாமைத்துவ செயற்திறமின்மை
---------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கண்டி பிரதேச மருந்துக் களஞ்சியத்தில் 2001 ஆம் களஞ்சிய கணிப்பீட்டின் போது வெளிப்படுத்தப்பட்ட ரூபா 1,217,482 ஆன களஞ்சிய பொருள் பற்றாக்குறை தொடர்பாக இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உக்குவல பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் கலல்பிட்டிய புடவைக் கைத்தொழில் நிறுவனத்திற்கு அருகே 108/1 ஆம் இலக்க முகவரியில் 16 ஆம் ஆண்டு காலமாக அனுமதியற்ற வியாபாரமொன்றை நடாத்திச் செல்லும் நபருக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மாகாண சுற்றுலா திணைக்களத்தினால் உடன்படிக்கையொன்றோ அல்லது எழுத்துமுல அங்கீகாரமொன்றோ இல்லாமல் வலய பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்த மாத்தளை ஹொட்டல் பாடசாலைக்கும் கேட்போர் கூடத்திற்கும் மின்சாரம் நீர், தொலைபேசி, சுத்திகரிப்பு சேவைகள், பாதுகாப்பு சேவைகள் மற்றும் சம்பளக் கொடுப்பனவிற்காக 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 2,937,547 செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தினால் கூட்டுறவு நிதியத்திலிருந்து 17 சங்கங்களுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 4,165,291 தொகையான கடன் 9 ஆண்டுகள் முதல் 25 வரையான காலமாக அறவிடப்பட முடியாமல் இருந்தது.

(உ) கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தில் காணப்பட்ட பதிவு இரத்துச் செய்யப்பட்ட 77 சங்கங்களுக்குரிய ரூபா 6,088,816 தொகை வைப்புச் செய்யப்பட்டு 10 ஆண்டு முதல் 12 ஆண்டுகள் வரையான காலம் கடந்திருந்த போதிலும், அச்சங்கங்களின் கலைப்பு நடவடிக்கைகள் பூர்த்தி செய்து பொறுப்புக்களை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மத்திய மாகாண நிர்வாகத் தொகுதி அமைந்துள்ள காணி கையேற்றலுக்காக தேசிய வீடமைப்பு அதிகாரசபைக்கு ரூபா 834,243 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், இதுவரை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) 2014 ஒக்தோபர் 24 ஆந் திகதிய 2014/06 ஆம் இலக்க காணி ஆணையாளர் சுற்றறிக்கையின் பிரகாரம் மற்றும் காணி கட்டளைச் சட்டத்தின் 19(4) பிரிவின் பிரகாரம் முறையான அதிகாரமொன்று இல்லாமல் தம்புள்ள பிரதேச செயலகத்தினால் தொடர்பாடல் கோபுரங்களிற்காக 10 காணித்துண்டுகள் வழங்கப்பட்டிருந்ததுடன், அக்காணிப் பகுதிகளை அரசிற்கு கையேற்கப்பட்டு முறையாக நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மாத்தளை

பிரதேச செயலகத்தினால் மானியப் பத்திரத்தின் நிபந்தனைகள் மீறப்பட்டு பகிர முடியாத காணித் துண்டொன்றின் அளவு வழங்கப்பட்டு தனியார் தொடர்பாடல் நிறுவனமொன்றுக்கு உபகுத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

(ஏ) மத்திய மாகாண வருமானத் திணைக்களம் அமைந்துள்ள கட்டிடத்தின் ஒரு பகுதி மக்கள் வங்கிக் கிளையொன்றை நடாத்திச் செல்வதற்காக வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அரசின் மதிப்பீட்டின் பிரகாரம் வாடகை அறவிடப்படாமை காரணமாக ரூபா 662,500 தொகை மாகாண சபை நிதியத்திற்கு இழக்கப்பட்டிருந்தது.

(ஐ) நூலக சேவை சபை அமைந்துள்ள கட்டிடத்தின் ஒரு பகுதி E-Wis நிறுவனத்திற்கு வழங்கியமைக்காக 2015 செப்தெம்பர் 30 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 604,538 தொகை மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஒ) கல்வித் திணைக்களம் 2005 ஆம் ஆண்டில் மேற்கொண்ட வாகன என்ஜின் திருத்தமொன்றுக்காக உரிய திகதியில் பணம் கொடுப்பனவு செய்யப்படாமை காரணமாக கொடுப்பனவு செய்ய நேர்ந்த ரூபா 82,488 ஆன வழக்கு கட்டணத்தை பொறுப்பு வாய்ந்தவர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

6.3 தொழிற்பாட்டு செயற்திறமின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மெததும்பர பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் 1950 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை அரசின் காணிகளை பிடித்துக்கொண்ட 32 அத்துமீறிய குடியிருப்பாளர் தொடர்பில் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 5 பாடசாலைகள் மற்றும் வலயக் கல்வி அலுவலகமொன்று 9 சந்தர்ப்பங்களின் போது வைப்புச் செய்யப்பட்ட நிர்மாணங்களுக்குரிய எஞ்சிய பணம் ரூபா 2,936,794 தொகை, மெதரட்டவங்ஷ கதையை அச்சிடுவதற்காக வழங்கப்பட்ட ரூபா 1,967,500 தொகை மற்றும் வல்கம மற்றும் திகம்பதன குளத்திற்காக (வழங்கப்பட்ட) காணி கையளிப்பிற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 1,138,000 தொகையை உரிய நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தாமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(இ) வத்தேகம வலயக் கல்வி அலுவலகத்தினதும் கலாசார திணைக்களத்தினதும் சம்பளங்களிலிருந்து கழிக்கப்பட்ட சம்பள நிவாரண நன்கொடை முறையே ரூபா 43,697 மற்றும் ரூபா 173,520 தொகை குறித்த செயற்பாடுகளுக்காக வழங்கப்படாமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) நாவுல பிரதேச செயலகத்திற்குரிய மாகாண காணி ஆணையாளரிடமிருந்து கிடைத்த ரூபா 459,037 தொகை, கொத்மலே பிரதேச செயலகத்திடமிருந்து 2011 மற்றும் 2013 ஆம் ஆண்டு வரை காலப்பகுதியில் 4 சந்தர்ப்பங்களில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 2,252,500 தொகை வலப்பனே பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் ரூபா 3,857,000 ஆன தொகையும் தலைமை அமைச்சிற்கு வேல்ட் விஷன் நிறுவனத்திடமிருந்து கிடைத்த ரூபா 1,886,011 தொகை உரிய செயற்பாடுகளுக்காக பயன்படுத்தாமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

(உ) 2015 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 162,000 பெறுமதியான 18 கேட்டல் உபகரணங்கள் வலது குறைந்தோருக்கு வழங்கப்படாமல் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன.

(ஊ) மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்திற்கு சிறிய அளவிலான மின் நிலையங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய நீர் திருப்பல் வரி மற்றும் தண்டப்பணம் ரூபா 4,180,000 அறவிடப்படாமல் இருந்ததுடன் தனியார் கம்பனியொன்றில் 2008 ஆம் ஆண்டு முதல் மின்சார சபைக்கு விற்பனை செய்யப்பட்ட மின் அலகினை அடிப்படையாகக் கொண்டு நீரை திருப்புவதற்கான வரி அறவிடுவதற்கு உடபலாத பிரதேச செயலகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(எ) பார்கேபல் சிறிய அளவு நீர் முன்மொழிவு முறைமை 1 மற்றும் II இற்காக நீர் வரியை கணக்கிடுமாறு அறிவித்து 2008 யூலை மற்றும் 2012 செப்தெம்பர் மாதங்களின் போது உரிய கம்பனியால் விடுக்கப்பட்ட வேண்டுகோள்களுக்கு மாகாண காணி ஆணையாளர் திணைக்களம் 2016 செப்தெம்பர் மாதத்தின் போதே பதிலளித்திருந்ததுடன் குறித்த உத்தியோகத்தர் பொறுப்புடன் செயற்படாமை நீர் வரி அறவிடப்படாமைக்கான தாமதமாக இருந்தது. மேலும், பார்கேபல் II நீர் மின் நிலையத்தின் இயலளவு 4.5 மெகா வொட்டாக இருந்த போதிலும், 4 மெகா வொட் என குறைத்து நீர் திருப்பல் வரி மற்றும் தண்டப்பணம் கணக்கிடப்பட்டமையால் ஏற்பட்ட நட்டம் ரூபா 275,000 ஆக இருந்தது.

(ஏ) நுவரெலியா பிரதேச செயலகப் பிரதேசத்தில் செயற்படுத்தப்பட்டு வந்த சிறிய நீர் மின் நிலையங்களுக்காக நீர் திருப்பல் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படாமையால் 2014 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரியதாக மாத்திரம் ரூபா 1,740,000 ஆன நீர் திருப்பல் வரி வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(ஐ) பள்னேபொல பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் உள்ள அரசின் 6 காணித்துண்டுகள் நீண்டகால குத்தகைக்கு வழங்கும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டு 3 - 21 வருடங்களுக்கு இடைப்பட்ட கால தாமதம் இடம்பெற்றிருப்பதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இதுவரை குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமையால் அரசிற்கு அறவிடக்கூடியதாக இருந்த வருமானம் இழக்கப்பட்டிருந்ததுடன் மானிய உரித்து பத்திர காணியில் 20 பேர்ச் அளவிலான நிலப்பகுதி அங்கீகாரமொன்று இல்லாமல் தனியார் தொலைபேசிக் கம்பனியொன்றுக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஒ) 1985-2010 காலப்பகுதியில் முறையாக கையொப்பமிடப்பட்ட 198 மானிய உரித்து பத்திரங்கள் பகிர்ந்தளிக்கப்படாமல் தம்புள்ள பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டிருந்ததுடன் அதில் 128 பத்திரங்கள் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் காணிப் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. இந்த மானிய பத்திரங்களின் 47 இல் பெயர் குறிப்பிடப்பட்ட நபர்கள் காணியை பயன்படுத்துவதில்லை என இனங்காணப்பட்டிருந்த போதிலும் மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அக்காலப்பகுதியில் முறையாக கையொப்பமிடப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டிருந்த எஞ்சிய 70 மானிய உரித்துப்பத்திரங்கள் மற்றும் 2015-2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அனுப்பி வைக்கப்பட்ட 38 மானிய உரித்து பத்திரங்கள் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் உரிய ஆட்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) 1982 முதல் 2009 காலப்பகுதியில் அம்பகமுவ பிரதேச செயலகப் பிரிவில் 112 நபர்களுக்கும் வலப்பனே பிரதேச செயலகத்தில் 65 நபர்களுக்கும் எழுதப்பட்ட 6 சுவர்ணபூமி மானிய உரித்து உறுதிகள் 58 ஜயபூமி உரித்துக்கள் மற்றும் இசுரு மானிய உரித்தொன்று 2017 பெப்ரவரி வரையிலும் உரிய நபர்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

6.4 மாகாண வீதி அபிவிருத்தி மற்றும் மேம்படுத்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வேலை பூர்த்தி செய்யப்படாத விவசாய வீதிகளுக்காக ரூபா 8,118,788 தொகையும் தோட்ட வீதிகளுக்காக ரூபா 4,653,567 என மொத்தம் ரூபா 12,772,355 தொகை கமநல அமைச்சினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) தோட்ட வீதி அபிவிருத்தி செலவின விடயத்தின் கீழ் நோக்கத்திற்கு முரணாக தோட்ட வீதியொன்றும் கமநலன் அல்லாத இரண்டு வீதிகளை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 1,674,054 செலவினமொன்று மாகாண விவசாய அமைச்சினால் செலவிடப்பட்டிருந்தது.

(இ) என்ஹில்ஸ தோட்ட வீதி, லபுக்கலே மேற்பகுதி வீதி, ஸ்மோல் டிரேடரன்வத்த, யதன்செட் தோட்ட வீதி I மற்றும் II ஆம் கட்டம், வெதமுல்ல லிஸ்லேன்ட் கமநல வீதி, தெற்கு மடகும்பற தோட்ட வீதி மற்றும் திக் ஓயா தமிழ் வித்தியாலய வீதி ஆகிய அபிவிருத்தியின் போது முறையாக வேலைகள் பூர்த்தி செய்யப்படாதிருக்கையில் ரூபா 9,035,041 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

6.5 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குண்டசாலை பிரதேச சபைக்குரிய ஜனசவிகம விளையாட்டரங்கினை அபிவிருத்தி செய்தல் மற்றும் ஓடுபாதை அமைப்பதற்காக மொத்த மதிப்பீட்டு கிரயம் ரூபா 6,447,600 ஆக இருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அதற்காக ரூபா 10,415,911 செலவிடப்பட்டிருந்ததுடன் வேலைத்தளத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 242,318 அளவான பொருட்கள் குறித்த நிர்மாணத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இது 2014 செப்தெம்பர் மாதம் திறக்கப்பட்ட தினத்திலிருந்து விளைவற்று புதர்கள் வளர்நது காணப்பட்டன.

(ஆ) பிரதம மற்றும் கல்வி அமைச்சினால் மத்திய மாகாணத்தில் பாடசாலை விட்டுச் சென்ற 300 மாணவர்களுக்காக ஹொட்டல் விருந்தோம்பல் சேவை தொடர்பான நான்கு மாத பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு பிராந்திய பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்திற்கு ரூபா 6.75 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், பாடநெறிக்காக மாணவர் ஒருவருக்காக அமைச்சினால் பங்களிப்பு ரூபா 15,000 ஆக இருந்தமை ரூபா 2.25 மில்லியன் கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

(இ) விவசாய அமைச்சின் கீழ் அவசர அபிவிருத்தி தேவைப்பாட்டிற்காக திட்டமிட்டிருந்த ரூபா 1,500,000 தொகையான நிதி ஏற்பாடுகளிலிருந்து அவசர அபிவிருத்திக்கு தேவைப்பாடென உறுதிப்படுத்தப்படாத இரண்டு இந்து கலாச்சார அலுவல்களுக்காக ரூபா 1,299,040 செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) விவசாய அமைச்சின் வேலை பூர்த்தி செய்யப்படாதிருந்த 3 நிர்மாண வேலைக்கு ரூபா 6,388,522 ஆன காசோலை எழுதி செலவினமொன்றாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

6.6 வெளிப்படையான முறைகேடுகள்

---

சரசவி உயன மஹா வித்தியாலயத்தின் வசதிகள் மற்றும் சேவைகள் கட்டண அறவீட்டின் போது ஒரு பற்றுச்சீட்டு புத்தகத்திலிருந்து ரூபா 6,000 பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்த இருந்த போதிலும் 526901 முதல் 527000 வரையான பற்றுச்சீட்டுப் புத்தகத்தின் மூலம் ரூபா 164,840 சேகரிக்கப்பட்டிருந்தது.

6.7 நிதிய குறைப் பயன்பாடு

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பாடசாலை விட்டுச் செல்லும் இளைஞர் யுவதிகளின் தொழில்வாய்ப்பு சந்தர்ப்பங்களிற்காக தொடர்புபடுத்தும் 2 செயற்திட்டங்களுக்காக முறையே ரூபா 380,000 மற்றும் ரூபா 10,100,000 தொகை பிராந்திய பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் இச்செயற்திட்டங்களுக்குரிய எந்த செலவினமும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தேனீக்கள் கட்டுப்பாட்டுடன் தொடர்புபடுவதன் ஊடாக தேன் உற்பத்தி விரிவுபடுத்துதல் செயற்திட்டத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 680,000 தொகையில் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் எந்தவொரு செலவினம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) ஒன்றிணைந்த கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 8 நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 1,000,000,000 நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், அதில் ரூபா 513,558,845 ஆன நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) தலைமை அமைச்சு 2016 ஆம் ஆண்டில் 3 சந்தர்ப்பங்களின் போது ரூபா 7,413,273 கூட்டுத்தொகையான 3 நிகழ்ச்சித்திட்டங்களுக்கு வேல்ட் விஷன் நிறுவனத்துடன் உடன்படிக்கைகள் செய்யப்பட்டிருந்தன. 2016 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு உடன்படிக்கை காலம் முடிவடைந்திருந்த போதிலும், அதற்குரிய நிகழ்ச்சித்திட்டங்களின் பௌதீக முன்னேற்றம் அல்லது உடன்படிக்கை நீடிக்கப்படல் அவதானிக்கப்படவில்லை. அந்நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 2,296,753 தொகை கிடைக்கப்பெற்றிருந்ததுடன் 2017 பெப்ரவரி 14 ஆந் திகதி வரையிலும் ரூபா 410,742 கொடுப்பனவு செய்து மீதியான ரூபா 1,886,011 தொகை பொது வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது.

(உ) அறிவுசார் பொருளாதாரத்தை நோக்கிய மனிதவள மூலதன அடிப்படையாக பாடசாலை முறைமை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் (TSEP) கீழ் மத்திய மாகாண கல்விக்கு ரூபா 431.9 மில்லியான் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், வலயக்கல்வி அலுவலகங்களிற்கு ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாடுகளிலிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 41.4 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் தலைப்பிற்குள் வராத கொள்வனவிற்காக ரூபா 10.7 மில்லியனும் பயிற்சி செயலமர்வுகளை நடாத்துவதற்காக ரூபா 6.9 மில்லியனும் செலவிடப்பட்டிருந்ததுடன் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட 89 நிர்மாண வேலைகளில் 56 இன் பௌதீக செயலாற்றல் 20 சதவீதமாக இருந்தது. மேலும் 26 நிர்மாண வேலைகள் மீளாய்வாண்டின் இறுதி வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் வேலைகளுக்காக (Works) ஒதுக்கப்பட்ட தொகையில் ரூபா 119.3 மில்லியன் அதாவது 81 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஊ) “அண்மைய பாடசாலை சிறந்த பாடசாலை” நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2016 ஆண்டிற்காக கலேவல வலயத்தின் 3 பாடசாலைகளுக்கு கல்வி அமைச்சின் மூலம் வழங்கப்பட்டிருந்த ரூபா 4,500,000 தொகை பயன்படுத்தப்படாமல் பாடசாலை அபிவிருத்தி சங்க கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது.

(எ) நுவரெலியா கல்வி வலயத்தின் 59 பாடசாலைகளுக்காக தர உள்ளீட்டு அபிவிருத்தி ஈடுபாட்டிற்காக முன்னைய ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட ரூபா 2,817,160 தொகையில் ரூபா 2,263,049 தொகை மீளாய்வாண்டின் ஆகஸ்ட் மாதம் வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஏ) ஆளுனரின் உத்தியோகபூர்வ விடுதி திருத்த வேலைகளுக்காக ரூபா 17,000,000 ஆன குறைநிரப்பு மதிப்பீடொன்றின் மூலம் ரூபா 18,000,000 நிதி ஏற்பாடு மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்டிருந்த போதிலும், திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் எதிர்பார்க்கப்பட்ட வேலை பூர்த்தி செய்யப்படாததன் காரணமாக ரூபா 12,048,375 அல்லது 67 சதவீதமான தொகை எஞ்சியிருந்தது.

(ஐ) மாகாண வீடமைப்பு திணைக்களம் சலுகை வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உத்தே நலனாளிகளுக்காக 2013, 2014 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது பிரதேச அபிவிருத்தி வங்கி கடன் வழங்கப்படாததன் காரணமாக ஆண்டின் இறுதியில் முறையே ரூபா 5,975,920, ரூபா 1,290,828 மற்றும் ரூபா 3,755,136 என மொத்தம் ரூபா 11,021,884 தொகை வங்கியினால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. வங்கி நிறுத்தி வைத்த இப்பணத்திற்காக எவ்வித வட்டியொன்றும் திணைக்களத்திற்கு கிடைத்திருக்கவில்லை.

6.8 செயற்பாடற்ற / குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டின் மாகாண திட்டவட்டமான அபிவிருத்தி மானியங்கள் மூலம் ரூபா 1,200,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டு 2014 சனவரி 08 ஆந் திகதி நாவலப்பிட்டி மாவட்ட வைத்தியசாலைக்கு கையளிக்கப்பட்டிருந்த பிளட் கேஸ் அனலைசர் இயந்திரம் செயற்படாமையால் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 03 ஆண்டுகளுக்கு அண்மித்த காலமாக பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

(ஆ) அக்குரண வைத்தியசாலைக்கு 2015 நவம்பர் மாதத்தின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 642,000 பெறுமதியான Defisrillator என்ற உபகரணம் பயன்பாட்டிற்குரிய போதியளவு நோயாளிகள் எண்ணிக்கையொன்று காணப்படாமையினால் குறைப்பயன்பாட்டிற்கு உட்பட்டு காணப்பட்டது.

(இ) வைத்தியசாலைகளின் தேவைப்பாடுகள் இனங்காணப்படாமல் 2016 மார்ச் மாதம் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 21,926,650 பெறுமதியான 36 வகையான சிகிசிசை மருத்துவ உபகரணங்கள் 2017 பெப்ரவரி 28 ஆந் திகதி வரையிலும் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் வைத்தியசாலை களஞ்சியங்களிலும் வாட்களிலும் வைக்கப்பட்டிருந்தன.

(ஈ) இரண்டாவது சுகாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஒன்று ரூபா 6,000 வீதம் ரூபா 1,524,000 கொடுப்பனவு செய்து 2014 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 254 இரத்த அமுக்க அளவீடுகள் சரியாக சுட்டிக்காட்டாமையால் அவற்றை மீண்டும் களஞ்சியத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது.

(உ) இரண்டாவது சுகாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 1,990,000 வீதம் செலுத்தி 2015 இன் இறுதிக் காலாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட 20 Defibrillator Monitor வைத்தியசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் 7 வைத்தியசாலைகளில் அனுபவமுள்ள உத்தியோகத்தர்கள் இல்லாமை மற்றும் அவசர சிகிச்சை பிரிவு ஸ்தாபிக்கப்படாமையால் அந்த உபகரணங்கள் பயன்படுத்தப்படாமல களஞ்சியங்களிலும் வாட்களிலும் வைக்கப்பட்டிருந்தன.

(ஊ) 2008 ஆம் ஆண்டில் நூலக சேவை சபை கட்டிட நிர்மாணத்தின் போது பொருத்தப்பட்டிருந்த ரூபா 1,700,000 ஆன கிரயமான டீசல் மின்பிறப்பாக்கியும் நீர்ப்பம்பியும் பொருத்தப்பட்ட திகதி முதல் செயற்படாமல் 9 ஆண்டுகளுக்கு அண்மித்த காலமாக விளைவற்றுக் காணப்பட்டன.

(எ) மாகாண நூலக சேவை சபை கட்டிடத்தின் 3755 சதுர அடியுடன் கூடிய இரண்டு மாடிகள் ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டதுடன், கீழ் மாடியில் பொருத்தப்பட்டிருந்த ரூபா 170,000 இற்கு அண்மித்த பெறுமதியான 2 காற்றுச் சீராக்கி இயந்திரங்களும் விளைவற்றுக் காணப்பட்டன. இந்த இரு மாடிகளையும் திருத்தியமைப்பத்காக 2016 ஆம் ஆண்டில் ரூபா 1,158,119 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஏ) அரச ஊழியர்களுக்கு உத்தியோகபூர்வ விடுதிகளை வழங்குவதற்காக பிரதம செயலகத்தினால் ரூபா 18,318,444 செலவில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் சபை செயலகத்திற்கு கையேற்கப்பட்டதன் பின்னர் உறுப்பினர்களுக்கு சுற்றுலா விடுதியொன்றாக மாற்றப்பட்டிருந்தது. அதற்கு தளபாடங்கள் மற்றும் திரைச்சீலைகள் கொள்வனவு செய்வதற்கு ரூபா 2,640,165 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், 2014 ஆம் ஆண்டிலிருந்து 2017 யூன் வரை 1277 நாட்களில் 101 நாட்கள் மாத்திரமே தங்குமிட வசதிகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தன.

(ஐ) பழைய சபை செயலகத்தில் 2048 சதுர அடி அளவிலான சபை மண்டபம் மற்றும் தளபாடங்கள் உட்பட 4 ஆண்டுகளாகவும் 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 39,881,670 செலவில் நிர்மாணிக்கப்பட்ட முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிறுவகத்தின் 2358.5 சதுர அடி கூட்டுத்தொகையான 14 அறைகள் 2 வருட காலமாக விளைவற்றுக் காணப்பட்டமை.

(ஒ) மாகாண கல்வித் திணைக்களத்தில் காணப்பட்ட 53 வாகனங்களில் 38 வாகனங்களுக்காக வருடக் கணக்காக சாரதிகள் வெற்றிடமாக இருந்ததுடன், அதில் 25 வாகனங்களுக்காக தற்காலிக அமைய சாரதிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதன் பிரகாரம், 13 வாகனங்கள் சாரதிகள் இல்லாமையால் விளைவற்றுக் காணப்பட்டன.

(ஓ) மத்திய மாகாண வர்த்தக, வாணிப மற்றும் சுற்றுலா திணைக்களத்தினால் ரூபா 1,190,406 செலவினமொன்றை மேற்கொண்டு ஹுலுகங்கை நீர்வீழ்ச்சிக்கு செல்லும் வீதியை அபிவிருத்தி செய்தும் பார்வையாளர் மண்டபத்தை நிர்மாணித்து 5 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் ஆக்கபூர்வமான நடவடிக்கையொன்றுக்கோ அல்லது வருமானம் உழைக்கக் கூடிய செயற்பாடுகளுக்கோ எடுக்கப்படாமல் நுழைவாயிலுக்குப் பூட்டு இடப்பட்டு மூடப்பட்டிருந்தது. அதன் காரணமாக செலவிடப்பட்ட செலவினம் விளைவற்றதாக இருந்தது.

6.9 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரதான அமைச்சின் கீழ் முன் பிள்ளை பருவ அபிவிருத்தி பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்கும் போது வலய பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தினால் பயிற்சி

நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்ட காரணத்தினால் ரூபா 695,110 ஆன மேலதிக நிர்வாக மற்றும் மேற்பார்வை செலவினமொன்றை செலவிட வேண்டியிருந்தது.

(ஆ) 29 பேருடன் கூடிய குழுவொன்றை வெளிநாட்டிற்கு அனுப்புவதற்காக விமான பிரயாணச் சீட்டுக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருக்கையில் குறித்த பயணத்தை இரத்துச் செய்தமையால் மத்திய மாகாண பிரதம செயலகத்தினால் செலுத்தப்பட்ட ரூபா 3,159,550 தொகை சிக்கனமற்ற செலவினமொன்றாக மாறியிருந்தது.

(இ) ரஷ்யா வெளிநாட்டு சுற்றுலாவிற்கு பெயரிடப்பட்ட மாகாண சபை உறுப்பினரொருவர் அப்பயணத்தில் கலந்து கொள்ளாமை காரணமாக அதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 336,550 (விமான டிக்கட் கட்டணங்கள் மற்றும் Ground tour Cost) தொகை பயனற்றதாக இருந்தது.

(ஈ) நிர்மாண மற்றும் அதன் திட்டங்களில் குறைபாடுகள் காரணமாக சுற்றுலா திணைக்களத்தினால் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 2,442,842 செலவில் நிர்மாணிக்கப்பட்ட நாலந்த கெடி கே வாகன நிறுத்துமிடம் மற்றும் சுற்றுலா வசதிகள் நிலையம் என்பன பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

6.10 இனங்காணப்பட்ட நட்டங்கள்
--------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விபத்திற்குட்பட்ட 116 வாகனங்களின் நட்டமான ரூபா 13,756,326 தொகை பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு அல்லது புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதில் ரூபா 6,563,500 தொகை நட்டமான 34 வாகனங்கள் விபத்திற்குட்பட்டு 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தது.

(ஆ) பிரதம அமைச்சில் 2013 முதல் 2016 வரை 4 வருட காலப்பகுதியில் இடம்பெற்ற 9 வாகன விபத்துக்கள் காரணமாக எழுந்துள்ள ரூபா 6,378,323 ஆன நட்டத்தில் ரூபா 4,279,296 மாத்திரம் காப்புறுதியினால் ஈடு செய்யப்பட்டிருந்ததுடன், விபத்துக்கள் தொடர்பாக மாகாண நிதி விதி 54.6 இன் பிரகாரம் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மாகாண கல்வித் திணைக்களத்திடமிருந்து அறவிடுவதற்கு காணப்படும் நட்டங்கள் சேதங்களின் பெறுமதி ரூபா 7,147,687 தொகையான 68 சம்பவங்கள் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்டிருந்ததுடன் ரூபா 4,008,944 பெறுமதியான 19 சம்பவங்கள் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்டிருந்தன.

(ஈ) நிதிப்பிரமாணம் 104, 105, மற்றும் 106 இன் பிரகாரம் இடம்பெற்ற நட்டங்கள் சேதங்கள் இயலுமான வரை துரிதமான அறவிடுவதற்கு தேவைப்பாடு காணப்பட்ட போதிலும், 15 கல்வி அலுவலகங்களுக்குரிய 1 வருடம் முதல் 7 ஆண்டுகள் வரை காலதாமதத்துடன் எந்தவொரு ஆரம்ப பரிசோதனையொன்றே செய்யப்படாத 28 நட்டங்கள் சேதங்கள் சம்பவங்கள் காணப்பட்டன.

(உ) கொழும்பு மருத்துவ வழங்கல் பிரிவினால் வழங்கப்பட்டிருந்த போதிலும் பின்னர் தரமில்லாததாக அறிவிக்கப்பட்டமையால் மத்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்திற்குரிய களஞ்சியங்களில் இருந்த ரூபா 3,028,815 பெறுமதியான காலாவதியாகாத 200 மில்லி கிராம் அளவிலான 6,730,700 பெரஸ் சல்பேட் குளிசைகள் மீளாய்வாண்டின் போது பாவனையிலிருந்து அகற்றப்பட்டிருந்தன.

(ஊ) மத்திய மாகாண திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கம்பெக்டர் வண்டி கொள்வனவின் போது பெறுகை செயற்பாடு பின்பற்றப்படாமையால் ரூபா 5,089,215 ஆன பணம் அரசிற்கு இழக்கப்பட்டிருந்தது.

(ஏ) 2008 ஏப்ரல் 24 ஆந் திகதிய 431 ஆம் இலக்க திறைசேரி செயலாளரின் அரச நிதிச் சுற்றறிக்கைக்கு இணங்காமல் நிறுவனத்திடமிருந்து விமான பிரயாணச் சீட்டுக்கள் கொள்வனவு செய்தமையால் ரூபா 1,027,200 ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது.

## 6.11 ஒப்பந்த செயற்பாட்டிலான குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மத்திய மாகாண வருமானத் திணைக்களத்தில் அமைந்துள்ள கட்டிடம் மற்றும் நுழைவு வீதி திருத்த வேலைகளுக்காக 2016 ஆம் ஆண்டில் குறை நிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 2,314,000 பெற்றுக்கொண்டு நுழைவு வீதியை மாத்திரம் திருத்தம் செய்து ரூபா 1,191,785 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. எனினும், அத்தியாவசிய பகுதி நிறைவேற்றப்படாமையால் கட்டிடம் பாதுகாப்பற்ற நிலைமைக்கு உட்பட்டிருந்தது.

(ஆ) 8 தேசிய உணவகங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 24,000,000 தொகையில் ரூபா 17,757,284 செலவிடப்பட்டிருந்ததுடன் உத்தேச 2 நிர்மாணங்கள் முழுமையாக கைவிடப்பட்டிருந்தமையால் ஒதுக்கப்பட்ட தொகையில் ரூபா 6,242,716 சேமிக்கப்பட்டிருந்தது.

(இ) கல்பாலம் பண்ணையில் கராஜ் ஒன்று நிர்மாணிப்பதற்காக ரூபா 1,034,242 தொகையில் இரண்டு முகாமையாளர் உத்தியோகபூர்வ வீடுகளை நிர்மாணிப்பதற்கு ரூபா 1,034,505 தொகையில் இரண்டு தொழிலாளர் வீடுகளுக்காக ரூபா 1,289,465 தொகையுமாக 04 நிர்மாண வேலைகளுக்காக ரூபா 3,358,212 வேலைக்காக உறுதிப்படுத்தாமல் இருக்கையில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 6.12 தாமதமான செயற்திட்டங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மாகாண சுகாதார துறையின் அபிவிருத்திக்காக மீளாய்வாண்டின் போது கட்டிடத் திணைக்களத்திற்கு ரூபா 128.7 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், 2017 மார்ச் 22 ஆந் திகதி வரையிலும் அந்த உபசெயதிட்டங்களின் நிர்மாணங்களில் செயன்முன்னேற்றமொன்று காணப்படவில்லை.

(ஆ) 8 நிகழ்ச்சித் திட்டங்களுக்குரிய இலக்கிடப்பட்ட 649 செயற்திட்டங்களில் 105 செயற்திட்டங்களில் மாத்திரம் சேவைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் அதில் 544 செயற்திட்டங்களில் ரூபா 220,073,616 பெறுமதியுடைய 421 செயற்திட்டங்கள் தொடர் வேலையாக குறைந்த பௌதீக செயன்முன்னேற்றத்துடன் செயற்படுத்தப்பட்டு வந்தன. ரூபா 48,247,000 பெறுமதியுடைய 118 செயற்திட்டங்கள் உடன்படிக்கை செய்யப்பட்டோ அல்லது ஆரம்பிக்கப்பட்டோ இருக்கவில்லை.

(இ) மாகாண திட்டவட்டமான அபிவிருத்தி மானியங்கள் (PSDG) பேரில் சமூக நீர் வழங்கல் மற்றும் ஆரோக்கிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செயற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த ரூபா 955,000 பெறுமதியான 03 செயற்திட்டங்களில் 02 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் போது செயற்படுத்தப்படாதிருந்ததுடன் ஒரு செயற்திட்டம் இரத்துச் செய்யப்பட்டிருந்தது.

(ஈ) 2016 ஆம் ஆண்டின் மாகாண சபை நிதி ஏற்பாட்டின் கீழ் தம்புள்ள பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் 3 நீர் நீடிப்புக்களுக்காக ரூபா 210,265 தொகை நீர் வழங்கல் சபைக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், 2017 மே வரையிலும் அச்செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) 2015 திசெம்பர் மாதத்தில் போக்குவரத்து திணைக்களத்தில் தாபிக்கப்பட்டுள்ள இலத்திரனியல் வருமான அனுமதிப்பத்திர நிகழ்ச்சித்திட்டம் (ERL), மத்திய மாகாணத்தில் நிலுவை வருமானத்தை தீர்வு செய்யும் நோக்காகக் கொண்டு செயற்படுத்தப்பட்டிருந்த போதிலும், 2017 மார்ச் 10 ஆம் திகதி வரையிலும் நிலுவையான வாகன அனுமதிப்பத்திரங்களின் அளவு மற்றும் அறவிடப்பட வேண்டிய வருமானம் என்பவற்றை இந்நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் சரியாக பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

6.13 முறைப்படி கையேற்கப்படாத காணிகள்

மத்திய மாகாண சபைக்குரிய 1991 யூன் 13 ஆந் திகதி முதல் கையளிக்கப்பட்டிருந்த சிங்கள் ரீ வீதி 54,56,58,60 மற்றும் 64 ஆம் இலக்க உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் பம்பரகலேவில் அமைந்துள்ள 32 ஆம் இலக்க உத்தியோகபூர்வ இல்லங்களில் அத்துமீறிய குடியிருப்பாளர்களை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

6.14 பதவியணியினர் நிருவாகம்

2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மாகாண சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

6.14.1 மாகாண சபை அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் நியதிச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட நிறுவனங்களின் ஊழியர் எண்ணிக்கை (பாடசாலை மற்றும் சுகாதார பதவியணியினர் தவிர)

| | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் ஊழியர் எண்ணிக்கை | மிகை ஊழியர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 1010 | 642 | 371 | 03 |
| மூன்றாம் நிலை | 586 | 763 | 50 | 227 |
| இரண்டாம் நிலை | 7345 | 4370 | 3008 | 33 |
| ஆரம்ப நிலை | 5578 | 5734 | 776 | 932 |
| ஒப்பந்த அடிப்படை | 13 | 1 | 12 | - |
| ஏனையவை | - | 293 | - | 293 |
| மொத்தம் | 14532 | 11803 | 4217 | 1488 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மாகாண பொறியியல் சேவைகள் திணைக்களத்தில் வெற்றிடங்கள் 56 ஆக இருந்தது.

(ஆ) மாகாண மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சிற்கு அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள் 76 ஆக இருந்த போதிலும் உள்ளவாறான எண்ணிக்கை 46 ஆக இருந்தது. அந்த எண்ணிக்கையிலும் 20 உத்தியோகத்தர்கள் 4 நிறுவனங்களுக்கு முறையற்ற விதத்தில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

(இ) மாகாண வீடமைப்பு திணைக்களம் மீளாய்வாண்டின் இறுதி வரையில் 14 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமல் இருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு உள்ளடக்கப்படாத அபிவிருத்தி உத்தியோகத்தரொருவர் மாகாண மாகாண மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சிற்கு இணைக்கப்பட்டிருந்தார்.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் கைத்தொழில் அமைச்சில் 48 வெற்றிடங்கள் காணப்பட்டன

(உ) மீளாய்வாண்டின் இறுதியில் மாகாண புடவைக் கைத்தொழில் திணைக்களத்தில் இரண்டாம் மட்டத்தில் 31 வெற்றிடங்கள் காணப்பட்டன.

(ஊ) மீளாய்வாண்டின் இறுதியில் கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் வியாபார மேம்பாட்டுத் திணைக்களத்தின் ஊழியர் எண்ணிக்கைத் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட 10 பதவிகளில் 27 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் 21 காவலாளிகள் மிகையாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(எ) மீளாய்வாண்டின் இறுதியில் மாகாண விளையாட்டு திணைக்களத்தில் 23 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், விளையாட்டு பணிப்பாளர் பதவிகள் 3 ½ ஆண்டு காலமாகவும் சிரேஷ்ட விளையாட்டு உத்தியோகத்தர் பதவி 3 ஆண்டுகளுக்கு அண்மித்த காலமாக வெற்றிடமாகக் காணப்பட்டன.

(ஏ) மீளாய்வாண்டின் இறுதியில் மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தில் 15 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், முறையான அங்கீகாரமொன்று இல்லாமல் அமைய சாரதியொருவர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தார்.

(ஐ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெவ்வேறு திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து தலைமை மற்றும் கல்வி அமைச்சிற்கு 09 உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டிருந்ததால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை மிகைத்து இருந்தது. அவ்வாறே தலைமை அமைச்சின் இரண்டு உத்தியோகத்தர்கள் கடமைகளுக்காக வேறு திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு இணைக்கப்பட்டிருந்தனர்.

(ஒ) மீளாய்வாண்டின் இறுதியில் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 212 ஆக இருந்த போதிலும், உள்ளவாறான எண்ணிக்கை 426 ஆக இருந்ததுடன், ஊழியர் எண்ணிக்கை திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட 10 பதவிகளில் 14 வெற்றிடங்கள் காணப்பட்டன. மிகை ஊழியர்களில் உள்ளடக்கப்பட்ட ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஊழியர்களுக்காக ரூபா 13,654,995 ஆன சம்பளம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

6.14.2 பாடசாலைப் பதவியணியினர்

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகை எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| அதிபர் | 1491 | 1059 | 432 | - |
| பிரதி அதிபர்கள் | 196 | 198 | - | 02 |
| ஆசிரியர்கள் | 24818 | 31272 | - | 6454 |
| சிற்றூழியர்கள் மற்றும் உதவி பதவியணியினர் | 2472 | 1702 | 1,056 | 286 |
| மொத்தம் | 28977 | 34231 | 1488 | 6742 |

மீளாய்வாண்டின் இறுதியில் 6554 ஆசிரியர்களுக்கு மிகையொன்று காணப்பட்ட போதிலும், கலேவல வலயத்திற்குரிய 108 பாடசாலைகளில் வெவ்வேறு பாடசாலைகளுக்காக 157 ஆசிரியர் வெற்றிடங்களும் நுவரெலியா மற்றும் கொத்மலை வலயப் பாடசாலைகளில் 710 ஆசிரியர் வெற்றிடங்களும் காணப்பட்டன. தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கைக்கு முரணாக வத்தேகம வலயத்தின் பாடசாலைகளில் 8 ஆ வருட சேவைக்காலத்தை விஞ்சிய 45 ஆசிரியர்கள் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

6.14.3 சுகாதார பதவியணியினர்

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகை எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 1232 | 922 | 321 | 11 |
| மூன்றாம் நிலை | 384 | 305 | 84 | 05 |
| இரண்டாம் நிலை | 4581 | 3448 | 1138 | 05 |
| ஆரம்ப நிலை | 3253 | 2300 | 1442 | 489 |
| ஏனையவை (அமைய, தற்காலிகம்) | - | 252 | - | 252 |
| மொத்தம் | 9450 | 7227 | 2985 | 762 |

சுகாதார பதவியணியில் வெற்றிடங்களுக்கு இடையே 37 விசேட வைத்திய நிபுணர்களும், 266 வைத்தியர்களும் தாதியர் சேவைகளில் 355 பேரும் குடும்ப சுகாதார சேவையில் 155 பேரும் சுகாதார செயற்பாட்டு உதவியாளர் பதவிகள் 552 உம் காணப்பட்டன.

6.15 வங்கி கணக்கிணக்கம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கண்டி மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் 295886 ஆம் இலக்க நடைமுறைக் கணக்கிற்காக 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 2016 ஆகஸ்ட் மாதம் வரையான வங்கி இணக்கக் கூற்று மாத்திரமே தயாரிக்கப்பட்டிருந்ததுடன் வழங்கப்பட்டு 6 மாதங்கள் கடந்திருந்த போதிலும், கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாத ரூபா 238,808 கூட்டுத்தொகையான 34 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆயுர்வேத திணைக்களத்தின் வாடிக்கையாளர் ஒருவரினால் 5 சந்தர்ப்பங்களில் நேரடியாக வங்கி நடைமுறைக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்த ரூபா 45,535 தொகையான வைப்புக்கள் மற்றும் 2 சந்தர்ப்பங்களில் வங்கிக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்த ரூபா 11,420 தொகையான கொடுப்பனவு இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களத்தின் வங்கி நடைமுறைக் கணக்கிற்கு வாடிக்கையாளர் ஒருவரினால் நேரடியாக செலவு வைக்கப்பட்டிருந்த ரூபா 1,259,750 தொகையான 2 வைப்புக்கள் மற்றும் ரூபா 261,145 தொகையான இனங்காணப்படாத கொடுப்பனவுகள் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

7. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

7.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

மாகாண பொறியியல் சேவைகள் திணைக்களம் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்றை தயாரித்திருக்கவில்லை.

7.2 பெறுகைகள் திட்டம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஆளுனர் அலுவலகத்திற்குரிய மூலதனச் செலவினத்திற்காக நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 65,200,000 இல் ரூபா 52,975,167 செலவிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 2,600,000 இற்கு மாத்திரம் பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய வரவுசெலவுத் திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த பெறுகை திட்டம் 04 திணைக்களங்களினால் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

7.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

(அ) பிரதம அமைச்சிற்குரிய 5 திணைக்களங்களினால் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு உரித்தில்லாத அபிவிருத்தி செலவின விடயங்களிலிருந்து ரூபா 199,540,714 ஆன சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையால் நடைமுறையல்லாத சொத்துக்கள் அசைவு அறிக்கைக்கு இப்பெறுமதியை உள்ளடக்க முடியாமல் இருந்தது.

(ஆ) பிரதம அமைச்சு மற்றும் அதற்குரிய 2 திணைக்களங்களால் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறைவேற்றப்படாத வேலைகள் மற்றும் சேவைகளுக்காக கற்பனை பெறுமதி அடிப்படையில் எழுதி வைக்கப்பட்ட 6 காசோலைகளுக்குரிய ரூபா 15,833,685 மற்றும் நிச்சயிக்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றாத 2 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்ட ரூபா 27,007,643 ஆஎன்ற வகையில் ரூபா 42,841,328 கூட்டுத்தொகை ஒதுக்கீட்டுக் கணக்கில் 3 செலவின விடயங்களின் கீழ் மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

(இ) மாகாண சபை அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் கீழ் செயற்படுத்தப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட 15 விசேட செயற்திட்டங்களுக்குரிய குறைநிரப்பு மதிப்பீடு மூலம் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 7,436,978,924 ஆன நிதிஏற்பாடுகளில் ரூபா 6,614,084,487 தொகை சேமிக்கப்பட்டிருந்தது.

7.4 வருடாந்த அறிக்கை சபையில் சமர்ப்பித்தல்

1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபை அதிகாரச்சட்டத்தின் 23(2) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கடந்த ஆண்டுகளின் மத்திய மாகாண சபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை மாகாண சபையில் சமர்ப்பித்தல் நிலைமை பின்வருமாறு

| ஆண்டு | அறிக்கை திகதி | சபையில் முன்வைத்த திகதி |
|---|---|---|
| 2011 | 2013.03.28 | 2015.09.08 |
| 2012 | 2014.07.04 | 2016.02.16 |
| 2013 | 2015.01.07 | 2015.05.05 |
| 2014 | 2015.10.08 | 2015.11.03 |
| 2015 | 2016.11.16 | 2017.07.18 |

7.5 தீர்வுசெய்யப்படாத கணக்காய்வுப் பந்திகள்

முன்னைய ஆண்டுகளுக்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வுப் பந்திகள் மாகாண பொதுக் கணக்கு குழுவினால் பரீட்சிக்கப்பட்ட பின்னர் 10 நிறுவனங்களின் பின்தொடர் நடவடிக்கை பூர்த்தி செய்யப்படாத பந்திகள் 134 காணப்பட்டன.

7.6 சுற்றாடல் மற்றும் சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுதல்

மாகாண சபையின் அடிப்படை தாக்கங்களுக்கு இணங்காத வகையில் இரண்டு அரச வங்கிகளில் ரூபா 1,362,627,575 தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தன.

08. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் | முறைமையின் குறைபாடுகள் |
|---|---|
| (அ) வருமான நிர்வாகம் | (i) வருமான மதிப்பீடு நடைமுறைச் சாத்தியமற்று இருந்தமை. |
| | (ii) வருமானம் மற்றும் நிலுவை வருமானம் அறவிடப்படாமை. |
| | (iii) வருமானம் உருவாகும் செயற்திட்டங்கள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுக்காமை |
| (ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம் | (i) நிலையான சொத்துக்கள் குறைப்பயன்பாடு |
| | (ii) வருடாந்த பொருள் மெய்மையாய்வு செய்யப்படாமை |
| (இ) மனித வள முகாமைத்துவம் | பதவியணியினர் மிகை மற்றும் வெற்றிடங்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாமை. |
| (ஈ) ஒப்பந்த நிர்வாகம் | (i) அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டங்களை செயற்படுத்தப்படாமை |
| | (ii) செயற்படுத்தப்படட ஒப்பந்தங்களின் செயன்முன்னேற்றத்தைப் பரீட்சிக்காமை |